










# நடப்பு நிகழ்வுகள்

## மார்ச் 3, 2022

# சர்வதேசம்

## அமெரிக்க ஆளுமைகளான இந்தியர்கள்

### சுருக்கம்:



- அமெரிக்காவின் புதிய அதிபர் ஜோ பைடன் அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளிகளில் குறைந்தது 20 பேர்களுக்கு அமெரிக்க அரசு நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்புகளுக்காகத் தேர்வு செய்துள்ளார். இந்த 20 நபர்களில் 13 பேர்கள் இந்திய வம்சாவளி பெண்களாவர்.
- பைடன் தெரிவு செய்தவர்களில் இரண்டு காஷ்மீர் பெண்களும் அடக்கம். கடந்த ஜனவரி 20 –ஆம் தேதி அமெரிக்க அதிபரான ஜோ பைடன் அமெரிக்காவின் 46–ஆவது அதிபர் ஆனார்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- அமெரிக்க சரித்திரத்தில் முதல் முறையாகப் பெண் ஒருவர் துணைஅதிபராகப் பொறுப்பு ஏற்றுள்ளார். அந்தப் பெருமையை பெற்றவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 56 வயதான கமலா ஹாரிஸ் .
- அமெரிக்க மக்கள் தொகையில் இந்திய வம்சாவளியினர் ஒரு சதவீதம் உள்ளனர். இருந்தாலும், இதுவரை எந்த அமெரிக்க அதிபரும் இந்திய வம்சாவளியினருக்கு வழங்காத முக்கியத்துவத்தை ஜோ பைடன் அளித்துள்ளார்.
- முந்தைய அமெரிக்க அதிபர்கள் ஒரு சில இந்திய வம்சாவளியினருக்கு மட்டுமே நிர்வாகப் பொறுப்புகளை வழங்கி வந்துள்ளனர். பைடன் அந்த மரபிலிருந்து விலகி 20 பேர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்.
- தேர்வு செய்திருக்கும் 20 இந்திய வம்சாவளியினரில் 17 பேர்களுக்கு வானளாவிய அதிகாரம் குவிந்திருக்கும் வெள்ளைமாளிகை நிர்வாகத்தில் நேரடி தொடர்புடையவர்கள் இது ஒரு மகத்தான மாற்றம்.
- பைடனின் இந்த இந்திய ஆதரவு நிலை, கமலா ஹாரிப்ஸ துணை அதிபராகத் தெரிவு செய்ததிலிருந்து வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துவிட்டது. டாக்டர் விவேக் மூர்த்தி என்பவரை பைடன் அமெரிக்க அறுவை சிகிச்சை மருத்துவ அமைப்பின் தலைவராக்கியுள்ளார்.
- தமிழ்நாடு வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க நாட்டவர். அமெரிக்க தேசிய பொருளாதாரக் குழுமத்தின் துணை இயக்குநராகப் பொறுப்பு ஏற்பவர் பரத் ராமமூர்த்தி.
- ஒபாமா அமெரிக்க அதிபராக இருந்தபோது அதிபரது அலுவலகத்தில் துணை இயக்குநராக இருந்த கவுதம் ராகவன் பைடன் நிர்வாகத்தில் பங்கேற்க மீண்டும் வெள்ளை மாளிகைக்கு வந்திருக்கிறார்.

## நாட்டின் அந்நிய செலாவணி –சரிந்தது

**சுருக்கம்:**



- ❖ நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 62,227 கோடி டாலராக சரிவடைந்ததாக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தெரிவித்துள்ளது.
- ❖ உக்ரைன் மீதான ரஷியாவின் போா் காரணமாக சா்வதேச அளவில் பங்குச் சந்தைகள் தொடர் ஏற்ற இறக்கத்தைச் சந்தித்து வருகின்றன.
- ❖ முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளைத் தொடா்ந்து திரும்பப் பெற்று வருகின்றனர். அதன் காரணமாக வெளிநாட்டு முதலீடுகளும் வெளியேறி வருகின்றன.

**முக்கிய சிறப்பம்சங்கள்:**

- ❖ கடந்த நவம்பர் 19-ம் தேதி நிலவரப்படி இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 640.4 பில்லியன் டாலராக உள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பை அதிகம் கொண்டிருக்கும்.
- ❖ நாடுகளின் பட்டியலில் இந்தியா 4-ம்இடத்தில் உள்ளது. சீனா, ஜப்பான்சுவிட்சர்லாந்து ஆகியவை முதல் 3 இடங்களில் உள்ளன.
- ❖ 2014-15 முதல் 2020-21 வரையிலான ஏழு ஆண்டுகளில் பெட்ரோலியப் பொருட்கள் மூலம் ரூ.16.7 லட்சம் கோடி கலால் வரி பெறப்பட்டுள்ளது.
- ❖ 2013-14-ல் பெட்ரோல் மீதான கலால் வரி லிட்டருக்கு ரூ.9.2, டீசலுக்கு ரூ.3.46 ஆக இருந்தது. தற்போது இது முறையே ரூ.27.9, ரூ.21.80 ஆக உள்ளது
- ❖ கச்சா எண்ணெய் விலை சா்வதேச அளவில் அதிகரித்துள்ளது. அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பும் சரிவடைந்துள்ளது.
- ❖ இந்நிலையில், கடந்த 11-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 964.6 கோடி டாலா் அளவுக்கு சரிந்ததாக ஆா்பிஐ தெரிவித்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு 62,227.5 கோடி அமெரிக்க டாலராக உள்ளது.
- ❖ யூரோ, பவுண்ட், யென் உள்ளிட்ட வெளிநாட்டு செலாவணி சொத்துகளில் (எஃப்சிஏ) ஏற்பட்ட சரிவே அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்ததற்கு முக்கியக் காரணமாகக் கூறப்பட்டுள்ளது. கணக்கீட்டு வாரத்தில் எஃப்சிஏ கையிருப்பு 1,110.8 கோடி டாலா் அளவுக்கு சரிந்து 55,435.9 கோடி டாலராக உள்ளது.
- ❖ தங்கத்தின் கையிருப்பு 152.2 கோடி டாலா் உயா்ந்து 4,384.2 கோடி அமெரிக்க டாலராக அதிகரித்தது. சா்வதேச நிதியத்தில் (ஐஎம்எஃப்) இந்தியாவின் கையிருப்பு 514.6 கோடி டாலராகக் குறைந்துள்ளது.

## இந்தியா–ஆஸ்திரேலியா – 'இந்த்ஆஸ்எக்டா' வர்த்தக ஒப்பந்தம்

**சுருக்கம்:**



- ❖ இந்தியா–ஆஸ்திரேலியா இடையே பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் பிரதமர் மோடி முன்னிலையில் இன்று கையெழுத்தானது.
- ❖ இந்தியா–ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் (இந்த்ஆஸ் எக்டா) மத்திய வர்த்தகம், தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறை அமைச்சர் டான் டெஹான் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- குறுகிய காலத்தில் இந்த்ஆஸ் எக்டா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பரஸ்பர நம்பிக்கையின் ஆழத்தை பிரதிபலிக்கிறது.
- இரு நாடுகளும் இந்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள இந்த ஒப்பந்தம் உதவும். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தின் நிலைத்தன்மைக்கு பங்களிக்க முடியும்.
- இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் மாணவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பரிமாற்றத்தை இந்த ஒப்பந்தம் எளிதாக்கும், உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.
- உலகக் கோப்பை இறுதிப் போட்டியை முன்னிட்டு ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணிக்கு வாழ்த்துகள்.
- சமீபத்திய ஆண்டுகளில் இரு நாட்டிற்கும் இடையேயான குறிப்பிடத்தக்க அளவிலான ஒத்துழைப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே வளர்ந்து வரும் உறவில் மற்றொரு மைல் கல்லாக இந்த்ஆஸ் எக்டா ஒப்பந்தம் உள்ளது.
- வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பைத் தவிர, வேலை, படிப்பு மற்றும் பயண வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் இரு நாட்டு மக்களுக்கும் இடையேயான அன்பான மற்றும் நெருக்கமான உறவுகளை ஒப்பந்தம் மேலும் ஆழப்படுத்தும்.

## இலங்கைக்கு இந்தியா 40 ஆயிரம் டன் பெட்ரோல், டீசல் வினியோகம்

### சுருக்கம்:



- இலங்கையில் கடுமையான அன்னியச்செலாவணி தட்டுப்பாடு உள்ளது. இதன் காரணமாக இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
- கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்காக அந்த நாட்டுக்கு இந்தியா 40 ஆயிரம் டன் டீசல், பெட்ரோலை நேற்று வினியோகம் செய்தது.
- போராட்டங்களை கட்டுப்படுத்த இலங்கை முழுவதும் ஊரடங்கு அமல் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் உணவு தட்டுப்பாட்டை போக்க 40,000 டன் அரிசியை இந்தியா அனுப்புகிறது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.
- உணவு தானியங்கள், பெட்ரோல், டீசல் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. நாள்தோறும் 13 மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படுகிறது இலங்கை அரசை கண்டித்து மாகாண சபைகள், உள்ளாட்சி அமைப்பு அமைச்சர் ரோஷன் ரணசிங்க நேற்று பதவியை ராஜினாமா செய்தார்.
- "அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே மக்கள் வெளியே செல்லலாம். மக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதி, பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு ஏதுவாக ஊரடங்கு அமல் செய்யப்பட்டிருக்கிறது" என்று இலங்கை அரசு விளக்கம் அளித் துள்ளது.
- இலங்கையின் உணவு தட்டுப் பாட்டை போக்க அந்த நாட்டுக்கு இந்தியா சார்பில் 3 லட்சம் டன் அரிசி அனுப்பப்பட உள்ளது. இதில் முதல்கட்டமாக 40,000 டன் அரிசி அனுப்பப்படுகிறது.

- தென்னிந்திய துறைமுகங்களில் இருந்து இலங்கைக்கு சரக்கு கப்பல்கள் மூலம் அரிசி அனுப்பும் நடவடிக்கை தொடங்கப்பட்டிருக்கிறது. அடுத்த சில நாட்களில் சரக்கு கப்பல்கள் இலங்கையை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியா சார்பில் சரக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட 40,000 டன் டீசல் இலங்கையை சென்றடைந்துள்ளது.
- சீனா, இலங்கையுடன் கடந்த 1952 டிசம்பர் 18–ம் தேதி ரப்பர்– அரிசி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதன்படி இலங்கையிடம் இருந்து கூடுதல் விலைக்கு ரப்பரை கொள்முதல் செய்த சீன அரசு, குறைந்த விலையில் இலங்கைக்கு அரிசி வழங்கியது.

# தேசிய செய்திகள்

## காற்றாலைகளுக்கு அருகில் 'சோலார்' மின் உற்பத்தி திட்டம்

### சுருக்கம்:



- காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ள கன்னியாகுமரி – முப்பந்தல் உள்ளிட்ட இடங்களில், 'சோலார்' எனப்படும், சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்க, தமிழக மின் வாரியம் முடிவு செய்து உள்ளது.
- தமிழகத்தில், 8,606 மெகா வாட் திறனில் காற்றாலை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதில், 17 மெகா வாட் திறன் உடைய மின் நிலையங்கள் மட்டுமே, மின் வாரியத்திற்கு சொந்தமானவை. மற்றவை, தனியார் நிறுவனங்களால் அமைக்கப்பட்டு உள்ளன.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- மே மாதம் முதல் செப்., வரை காற்றாலை சீசன். அந்த காலத்தில் மட்டும், காற்றாலைகளில் இருந்து, அதிக மின்சாரம் கிடைக்கும்.
- கன்னியாகுமரி மாவட்டம், முப்பந்தல்.மதுரையில், புலியங்குளம்; துாத்துக்குடியில், முள்ளக்காடு, கயத்தாறு; திருப்பூரில், கேதானுார்; கோவையில், சுல்தான்பேட்டை ஆகிய இடங்களில் காற்றாலைகளை வாரியம் அமைந்துள்ளது
- 1990 காலகட்டத்தில் அமைக்கப்பட்டவை. அவற்றில் இருந்து மிகவும் குறைந்தளவில் தான் மின்சாரம் கிடைக்கிறது.
- மின் வாரியத்தின் காற்றாலைகள் அமைந்துள்ள வளாகங்களில், பல ஏக்கரில் காலி இடங்கள் உள்ளன.தனியார் நிறுவனங்கள், தங்களின் காற்றாலைகள் அருகில் உள்ள காலி இடங்களில், சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்கின்றன. இதனால் ஆண்டுக்கு, 300 நாட்களுக்கு மேலாக சூரியசக்தி மின்சாரம் கிடைக்கிறது.
- முப்பந்தல், கயத்தாறு, சுல்தான்பேட்டை, கேதானுார் ஆகிய இடங்களில் உள்ள காற்றாலைகளுக்கு அருகில், சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்க, மின் வாரியம் முடிவு செய்துள்ளது.
- காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தை எடுத்து செல்ல, ஏற்கனவே மின் வழித்தட கட்டமைப்புகள் உள்ளன. இதனால், அந்த இடங்களில் சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்கும் போது, மின் வழித்தடங்களுக்கு அதிக செலவாகாது.
- பல ஆண்டுகளுக்கு முன் மிக குறைந்த திறனில் அமைக்கப்பட்ட காற்றாலைகளுக்கு பதிலாக, அதிக திறன் உடைய காற்றாலை மின் நிலையங்களை அமைக்கவும், மின் வாரியம் திட்டமிட்டு உள்ளது.இதனால், ஒரே இடத்தில் பகலில் சூரியசக்தி மின்சாரமும், இரவில் காற்றாலை மின்சாரமும் கிடைக்கும். இரண்டு வகை மின்சாரமும் சுற்றுச்சூழலை பாதிக்காது .

# விஜய கரிசல் குளம் அகழாய்வு

### சுருக்கம்:



- ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் யூனியன் அழகன்குளம் கிராமம் வங்கக்கடலும், வைகை நதியும் சங்கமிக்கும் முகத்துவாரம் அமையப்பெற்ற ஊர். அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கடந்த 1986–87–ம் ஆண்டு அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
- சிவப்பு நிற பானை ஓடுகள், ரோமன் நாட்டு மதுக்குடுவைகள், கி.பி. 4–ம் நூற்றாண்டை சேர்ந்த ரோமானிய காசு, எலும்பினால் செய்யப்பட்ட சீப்பு, மோதிரம் போன்ற பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- ஆய்வு செய்த போது அவை சுமார் 2 ஆயிரத்து 360 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவை என்பது தெரியவந்துள்ளது. 1990–91, 1993–94, 1995–96, 1997 என பல்வேறு காலகட்டங்களில் இந்த அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பண்டைய தமிழ் எழுத்துக்கள், ஹரப்பா நாகரீக காலத்தில் இருந்த பகடைக்காய், சங்க கால பாண்டியர்கள் உருவம் பொறித்த செம்பு காசு, விலை உயர்ந்த கல்மணி நகைகள், சங்கு வளையல்கள், ரோமானிய நாட்டு கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பொருட்கள், இரும்பு வாள், கட்டிடத்தின் தரைப்பகுதி போன்றவை கிடைத்தன.
- ரோமானிய நாட்டுடன் அழகன்குளத்துக்கு இருந்த வணிக தொடர்பு உறுதி செய்யப்பட்டது. அகழாய்வில் எடுக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இங்கிருந்து எடுத்து செல்லப்பட்டு அவை தற்போது எங்குள்ளது என்ற விவரங்கள் தெரியாத நிலை இருந்து வருகிறது.
- அகழாய்வு பணிகள் நடந்ததற்கான எவ்வித தடயங்களும் இல்லாமல் உள்ளது. இதனால் அழகன்குளம் வரும் சுற்றுலா பயணிகள், மாணவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர்.
- இந்த நிலையில் கடந்த 2016–17ம் ஆண்டு நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் அழகன்குளத்தில் அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- அதிகமாக 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. தமிழகத்தில் இதுவரை கிடைக்காத சிலுவை பொறித்த முத்திரை, இரும்பு பொருட்கள் தயாரிக்கும் கொல்லம்பட்டறை, சங்குகள், உறைகிணறு, தீட்டுக்கல் போன்றவை கிடைத்தன.

# காஷ்மீர் பண்டிட்கள் மறுவாழ்வு மசோதா:

### சுருக்கம்:



- கடந்த 1990–களில் தீவிரவாதத் தால் காஷ்மீரை விட்டு லட்சக்கணக்கான பண்டிட் சமூகத்தினர் வெளியேற்றப்பட்டனர்.
- 'காஷ்மீர் பண்டிட்கள் (உதவி, மறுசீரமைப்பு, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றம்) சட்டம் 2022' என்ற தலைப்பில் மாநிலங்களவையில் காங்கிரஸ் உறுப்பினர் விவேக் தன்கா நேற்று முன்தினம் தனிநபர் மசோதா கொண்டு வந்தார்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- பண்டிட் சமூகத்தினருக்கு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மறுவாழ்வு அளிப்பது, அவர்களின் சொத்துகளை பாதுகாப்பது, அவர் களின் கலாச்சார பாரம்பரியத்தை மீட்டெடுப்பது, பாதுகாப்பை உறுதிசெய்வது, அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நிதி வழங்குவது ஆகியவற்றுக்கு இந்த மசோதா வகை செய்கிறது.
- மேலும் 1988 தொடங்கி, காஷ்மீர் பள்ளத் தாக்கில் பண்டிட்களுக்கு எதிரான அட்டூழியங்கள் மற்றும் அவலங்கள் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தும் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிடுவதும் மசோதாவில் அடங்கும்.
- உச்ச நீதிமன்ற மூத்த வழக் கறிஞரான விவேக் தன்கா ஜூன் மாதம் எம்.பி. பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார்.
- ம.பி.யில் இருந்து காங்கிரஸ் மீண்டும் தேர்வு செய்யாவிட்டால் இந்த மசோதா காலாவதியாகிவிடும்.
- காஷ்மீர் பண்டிட் சமூகத்தை வழிநடத்தும் ஒரு பிரதான அமைப்பான பனுன் காஷ்மீரின் மூத்த தலைவர் டாக்டர் அக்னிஷேகர், "மத்திய அரசு இதுபோன்ற ஒரு வரலாற்று முடிவை 2019 ஆகஸ்ட் 5 அன்று எடுத்தது. ஆனால், கடந்த ஒரு வருடமாக காஷ்மீர் பண்டிட்களின் மறுவாழ்வுக்காக அரசு இதுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை. "

## சங்க கால பாண்டிய மன்னர்களின் நாணயங்கள்

### சுருக்கம்:



- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது. 146 ஆண்டு கால அகழாய்வு வரலாற்றில் முதல்முறையாக சங்ககால பாண்டிய மன்னர்களின் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டது.
- தமிழர் வரலாற்றை மீள் உருவாக்கம் செய்யும் வகையில், கீழடியில் அகழாய்வுகள் ஒரு பக்கம் நடந்து கொண்டே இருப்பதைப் போலவே, வேறு பல வடிவங்களிலும் வரலாற்று ஆய்வுகள் தமிழகத்தில் நடந்து வருகின்றன.
- குறிப்பிடத்தக்க ஆய்வுகளாக கல்வெட்டு மற்றும் நாணய ஆய்வுகள் உள்ளன.நாணயத்தில் கடல் ஆமைகள் உருவம், மரம், யானை, மீன்களின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.
- கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, கொடிசியா வளாகத்தில் பல்வேறு தலைப்புகளில், தமிழ் ஆய்வரங்குகள் நடந்து வருகின்றன.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- நாணயவியல் துறையில், சங்ககால சோழர் நாணயத்தில் முதல் முறையாக ஒரு மனித உருவம் தற்போது கண்டறியப்பட்டு உள்ளது.
- கி.மு. 4ஆம் நூற்றாண்டில் தொடங்கி, கி.பி.1867ஆம் ஆண்டு வரையில் தமிழகத்தை ஆண்ட பல்வேறு அரசர்களும் தங்கள் நாணயங்களை வெளியிட்டு உள்ளனர்.
- கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையிலான சங்க காலத்தில் தமிழகத்தில் புழங்கிய நாணயங்கள் 'சங்க காலத் தமிழகக் காசுகள்' என்று அழைக்கப்படுகின்றன.
- நாணயங்கள் பெரும்பாலும் செம்பினால் செய்யப்பட்டவை, சதுர வடிவானவை. அரிதாக வெள்ளி நாணயங்களும், வட்ட வடிவ நாணயங்களும் கிடைப்பது உண்டு.
- வட்ட வடிவ நாணயங்கள் கி.பி. 1–3ஆம் நூற்றாண்டில் வெளியான பிற்பகுதி சங்க கால நாணயங்களாக கருதப்படுகின்றன .
- சங்க கால நாணயங்களில், சங்க கால சேரர்கள் வெளியிட்ட நாணயங்கள், சங்க காலப் பாண்டியர்கள் வெளியிட்ட நாணயங்கள், சங்க கால சோழர்கள் வெளியிட்ட நாணயங்கள், மலையமான் என்ற குறுநில மன்னர் வெளியிட்ட நாணயங்கள், அதிரன் எதிரான் சேந்தன் என்ற

ஒரு குறிப்பிட்ட குறுநில மன்னன் வெளியிட்ட நாணயங்கள் என்று மொத்தம் 5 வகையான நாணயங்கள் கிடைத்துள்ளன.

## இலங்கை:அரிசி அரசியல்

### சுருக்கம்:



- இலங்கை மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி வழங்குவ தற்குத் தேவையான அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- இந்தியாவிலிருந்து 300,000 மெற்றிக் தொன் அரிசியை விரைவாக இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- 1948இல் இலங்கை தனது அபிவிருத்திப் பயணத்தை ஆரம்பித்தபோது ஏனைய காலனித்துவ நாடுகளுக்கு அமைந்திராத சில அடிப்படை நிபந்தகைளைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தது என்பது வெளிப்படையானது தான்.
- ஆனால் அதேவேளை ஒரு சுதந்திர நாடாக முன்னோக்கி நகருவதில் இலங்கைக்கு எவ்வித சவால்களும் இருக்கவில்லை என்பது அதன் அர்த்தமல்ல. வாய்ப்புகளைப் போன்றே சவால்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது.
- 1950களில் உலக உணவுப் பொருள்விலைகள் சடுதியாக அதிகரித்துச் சென்றன. இதனால் உணவு இறக்குமதிக்காகப் பெருந்தொகைப் பணத்தை செலவிட நேர்ந்தது. சனத்தொகை அதிகரிப்பு எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியது. மானிய விலையில் உணவுப் பங்கீட்டுத் திட்டம் அதற்கு காற்று ஊதி பெருநெருப்பாக்கியது. உணவு மானியத்திற்கான அரசாங்க செலவீடுகள் அதிகரித்துச் சென்றன.
- சம்பா அரிசிக்குப் பதிலாக இரு இலட்சம் மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் GR 11 (Short Grain Rice) அரிசியும் இறக்குமதி செய்யப்படும்.
- வெளிச்சந்தையில் போதுமான அளவு அரிசி இருப்பை பேணும் வகையில் அரிசியை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன முன்மொழிந்துள்ளார்.
- இரசாயன உரத் திட்டம் ஒரு நல்ல வேலைத்திட்டம் எனவும், ஆனால் அதன் முடிவுகளை தற்போது காணக் கூடியதாக அமைந்துள்ளதாக முன்னணி வர்த்தகர் டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார்.
- தற்போதைய அரிசியின் விலை மேலும் உயராது என்றும் இதுவே அதிகபட்ச விலையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
- அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த அதிகள வில் நெல் பயிரிட வேண்டும் என்றும், ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெல் உற்பத்தி குறைவுக்கான பொறுப்பைத் தான் ஏற்க முடியாது என்றும், அது தனது பிரச்சினை யல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முதல் அகல ரயில் பாதை

## சுருக்கம்:

- நேபாள எல்லையில் இருந்து 1 கி.மீ., தொலைவில் பீஹாரின் ஜெயநகர் உள்ளது . கடந்த, 1937ல் ஜெயநகர் மற்றும் நேபாளத் தின் பிஜல்புரா இடையே 66.7 கி.மீ., துாரத் துக்கு ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.
- நேபாளம் இடையே, முதல் அகல ரயில் சேவையை பிரதமர் மோடி மற்றும் நேபாள பிரதமர் ஷேர் பகதுார் டியூபா நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தனர்.மூன்று நாள் பயணமாக டில்லி வந்துள்ள நேபாள பிரதமர் ஷேர் பகதுார் டியூபா, பிரதமர் மோடியை நேற்று சந்தித்துப் பேசினார்.

## முக்கிய சிறப்பம்சங்கள்:

- 2001ல் நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ரயில் சேவை நிறுத்தப்பட்டது .
- ஜெயநகர் – பிஜல் புரா குறுகிய ரயில் தடத்தை , அகல ரயில் பாதையாக மாற்ற இந்தியா, 1,000 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது .
- பீஹாரின் ஜெயநகர் மற்றும் நேபாளத்தின் குர்தா இடையிலான 34.9 கி.மீ., துாரம் அகல ரயில் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.
- நேபாளத்தில் ரயில்வே, மின்சாரம் ஆகிய துறைகள் தொடர்பாக நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு தரப்பு பேச்சுக்கு பின், மோடி, ஷேர் பகதுார் டியூபா இருவரும், 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக பீஹாரின் ஜெயநகரில் இருந்து, நேபாளத்தின் குர்தா வரையிலான முதல் அகல பயணியர் ரயில் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தனர்.
- நேபாளத்தில், இந்தியாவின் 'ரூபே கார்டு' பணப் பரிவர்த்தனை சேவையும், மின் பகிர்மான திட்டமும் துவக்கி வைக்கப்பட்டன. இரு நாடுகள் சார்பாக கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்தியா – நேபாளம் இடையே உள்ள தனித்தன்மை வாய்ந்த உறவு உலகில் வேறு எங்கும் காணாதது என, மோடி தெரிவித்துள்ளார். நேபாளத்தின் அமைதி, வளம், வளர்ச்சிக்கு இந்தியா தொடர்ந்து உதவும்.
- இந்த வழித்தடத்தில், 127 சிறிய மற்றும் 15 பெரிய பாலங்கள் உள்ளன குர்தாவில் இருந்து பிஜல்புரா வரையிலான, 17 கி.மீ., துாரத்தை அகல ரயில் பாதையாக மாற்றும் பணி நடந்து வருகிறது .
- நேபாள அரசு, கொங்கன் ரயில் நிறுவனத்திடம் இருந்து, 100 கோடி ரூபாய்க்கு இரு ரயில்களை வாங்கியுள்ளது .

# டி ஆர் டி ஓ உருவாகியுள்ள முனை திருப்பி சுடும் ஆயுதம்

## சுருக்கம்:



- நெருக்கடியான நிலையை பாது காப்புப் படையினரும், தீவிரவாத எதிர் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ள துணை ராணுவப் படையினரும், காவல் துறையினரும் அவ்வப்போது சந்திக்க நேரிடும்.
- இத்தகைய சூழலில் பயன்படுத்த, ஓர் ஆயுத அமைப்பை உருவாக்கியுள்ளது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ). இந்த ஆயுத அமைப்பில் துப்பாக்கியைப் பொருத்தி பயன்படுத் தலாம்.

## முக்கிய சிறப்பம்சங்கள்:

- முன்பகுதி துப்பாக்கியுடன் இடது, வலது புறங்களில் திரும்பும் வகையில் வடிவமைக்கப்பட் டுள்ளது. இதனால் படை வீரர், அறைக்கு வெளியே மறைவாக இருந்தபடி துப்பாக்கியை திருப்பி அறை யின் உள்ளேயிருக்கும் இலக்கை நோக்கி சுடமுடியும்.
- ஆயுத அமைப்பின் முகப்பில் வீடியோ கேமரா, லேசர் குறிபார்க்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளன. இதனால் வண்ண வீடியோ திரையில் இலக்கை குறிபார்த்து துப்பாக்கியை இயக்கலாம்.

- இரவில் பயன்படுத்த ஏதுவாக வெளிச்சம் உமிழும் விளக்கு, இரவு காட்சி கேமரா ஆகியவையும் உண்டு.
- மின்னணு கருவிகள் இயங்க மின்கலனும் இதில் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கு விளிம்பு கடும் ஆயுத அமைப்பு (Cormer Shat Weapon System) என்று பெயர். இது துப்பாக்கியல்ல, துப்பாக்கியை இணைத்து பல்வேறு வசதிகளுடன் பயன்படுத்தும் கருவி என்பதால் ஆயுத அமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
- மகாராஷ்டிராவின் புனே நகரத்தில் உள்ளடிஆர்டிஓ ஆய்வகமான போர்த்தளவாட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு இதை உருவாக்கியுள்ளது. எல்லை காக்கும் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாத எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் காவல்துறையினருக்கும் இந்த ஆயுதம் மிகவும் அத்தியாவசியமானது.
- பாதுகாப்புப் படை வீரரை வெளிக்காட்டாமல் துல்லியமாக தாக்குதல் தொடுக்க சாத்தியப்படுத்துவதால், இந்த ஆயுதம் பாதுகாப்புப் படையினருக்கு பலம் கூட்டும் முக்கிய போர்த் தளவாடம் எனலாம்.
- உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ஆயுதம் உருவாகியிருப்பது கூடுதல் சிறப்பு.

## தருவைகுளத்தில் மாநில அளவிலான – கடற்கரை விளையாட்டு போட்டிகள் தொடக்கம்

### சுருக்கம்:

- தருவைகுளம் கடற்கரைப் பகுதியில் மாநில அளவிலான கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ் தொடங்கி வைத்தார்.
- கடலோரப் மாவட்டங்களில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து, அவர்களுக்குப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காக, கடற்கரை விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன.



- 2021–22–ம் ஆண்டுக்கான மாநில அளவிலான போட்டிகள் தருவைகுளத்தில் 2 நாட்கள் நடக்கின்றன.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகள், மாநில அளவிலான போட்டியில் பங்கேற்கின்றன. 10 மாவட்டங்களில் இருந்து 300–க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.
- தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தில் மாநில அளவிலான கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை தொடங்கின.
- மாநில போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்கு ரூ. 3,000, இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூ. 2,000, மூன்றாமிடம் பெறுவோருக்கு ரூ.1,000 வழங்கப்படவுள்ளது .
- நிகழ்ச்சியில், ஓட்டப்பிடாரம் எம்எல்ஏ எம்.சி. சண்முகையா, கோவில்பட்டி வருவாய்க் கோட்டாட்சியா் சங்கரநாராயணன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞா் நல அலுவலா்கள் பேட்ரிக் (தூத்துக்குடி), ஆண்டனி அதிா்ஷ்டராஜ் (தஞ்சாவூா்), தருவைகுளம் ஊராட்சி உறுப்பினா் காடோடி, ஓட்டப்பிடாரம் வட்டாட்சியா் நிஷாந்தினி, கூடைப்பந்து பயிற்றுநா் ஜெயரத்தினராஜ், கால்பந்து பயிற்றுநா் நடராஜ்முருகன், ஸ்குவாஸ் பயிற்றுநா் புஷ்பராஜ் பயஸ் ஆசீா், பயிற்றுநா்கள், மாணவா்–மாணவிகள், வீரா்கள் பங்கேற்றனா்.
- ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு உள்பட்ட பகுதிகளில் சிறு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான இடங்களை ஆட்சியா், ஓட்டப்பிடாரம் எம்எல்ஏ ஆகியோா் ஆய்வு செய்தனா். பல்வேறு அரசுத் துறை பயன்பாட்டுக்காக கீழஅரசரடி, முள்ளக்காடு பகுதிகளில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலங்களைப் பாா்வையிட்டனர்.